**டிசம்பர் – 01**

# TNPSC துளிகள்


- தமிழ்நாடு மாநிலமானது தொடர்ந்து 6வது முறையாக உறுப்பு தானத்தில் சிறந்த மாநிலம் என்ற விருதைப் பெற்றுள்ளது.
- சமீபத்தில், மகாராஷ்டிர மாநில அரசானது மும்பையில் நீர் சுத்திகரிப்பு (உப்பு நீக்கம்) ஆலையை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
  - தமிழ்நாடு, குஜராத், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு நீர் சுத்திகரிப்பு ஆலையைத் தொடங்கும் 4வது மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- 11வது தேசிய உறுப்பு தான தினமானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தினால் அனுசரிக்கப்பட்டது.
- ரஷ்யாவானது ஸிர்கோன் என்ற ஒரு மீயொலி வேக ஏவுகணையை ஆர்க்டிக் பகுதியில் வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.
  - இந்த ஏவுகணையானது மாக் 8 வேகத்தில் வெள்ளைக் கடலிலிருந்து பேரண்ட்ஸ் கடல் பகுதிக்கு ஏவப்பட்டது.
- பூடான் நாடானது ஜெர்மனியுடன் ராஜாங்க உறவுகளைத் தொடங்கி உள்ளதாக அறிவித்துள்ளது.
  - கடந்த 7 ஆண்டுகளில் பூடான் பேரரசின் முதலாவது இராஜாங்க உறவுமுறை இதுவாகும்.
- மாதவிடாய் சுகாதாரத் துணிகள், உறி பஞ்சுகள் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் உலகின் முதலாவது நாடு ஸ்காட்லாந்து ஆகும்.
  - மாதவிடாய் காலப் பொருள்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டிற்கு எதிராக உலகில் இது போன்ற நடவடிக்கையை எடுத்திருக்கும் முதலாவது நாடு ஸ்காட்லாந்து ஆகும்.
- நியூஸிலாந்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் கௌரவ் சர்மா அவர்கள் அயல்நாட்டில் சமஸ்கிருத மொழியில் பதவிப் பிரமாணம் எடுத்த முதலாவது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாராளுமன்றவாதி என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
  - இவர் முதலில் நியூசிலாந்தின் பூர்வாங்க மொழியான மௌரி என்ற மொழியிலும் அதன் பின்னர் சமஸ்கிருத மொழியிலும் பதவிப் பிரமாணம் எடுத்துள்ளார்.
- சமீபத்தில் நிலக்கரியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முதலாவது மற்றும் கடைசி அரபு நாடாக ஐக்கிய அரபு அமீரகம் உருவெடுத்துள்ளது.
  - பெரும்பாலான வளைகுடா நாடுகள் அதிக அளவு எண்ணெய் மற்றும் இயற்கை வளங்களைப் பெற்றுள்ளதால் தங்களின் மின்சாரத் தேவைகளை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி ஆலைகளைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்கின்றன.

# தேசியச் செய்திகள்

## 3வது உலக புதுப்பிக்கத் தக்க ஆற்றல் முதலீட்டுச் சந்திப்பு மற்றும் கண்காட்சி (RE-Invest 2020)

- இந்த மாநாடானது மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகத்தினால் (Ministry of New and Renewable Energy - MNRE) நடத்தப்படுகின்றது.

- 2020 ஆம் ஆண்டிற்கான இந்த மாநாட்டின் கருத்துரு, "நீடித்த ஆற்றல் மாற்றத்திற்கான புத்தாக்கம்" என்பதாகும்.
- ஆஸ்திரேலியா, பிரான்சு, டென்மார்க், ஜெர்மனி, ஐக்கியப் பேரரசு, மாலத் தீவுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை Re-Invest மாநாட்டின் பங்காளர் நாடுகளாகும்.
- குஜராத், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகியவை இதன் பங்காளர் மாநிலங்களாகும்.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனானது உலகின் 4வது மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனாகும்.
- இது அனைத்து மிகப்பெரிய பொருளாதார நாடுகளிடையே மிக அதிக வேகத்தில் வளர்ந்து வருகின்றது.
- தற்பொழுது இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனானது 136 ஜிகா வாட்களாக உள்ளது.
- இது நமது மொத்தத் திறனில் 36% ஆகும்.
- இந்தியாவின் வருடாந்திர ஆற்றல் உற்பத்தித் திறனானது 2017 ஆம் ஆண்டு முதல் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்னாற்றலை விட முன்னிலையில் உள்ளது.
- கடந்த 6 ஆண்டுகளில், இந்தியாவானது இரண்டரை மடங்கு என்ற அளவில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளது.
- புனல் (நீர்) மின்சாரமானது மத்திய மின்சாரத் துறை அமைச்சகத்தினால் தனியாக நிர்வகிக்கப் படுகின்றது. அதனால் இது MNRE திட்டங்களில் இணைக்கப் படவில்லை.




## லச்சித் திவாஸ்

- இது நவம்பர் 24 அன்று இந்தியாவில் அனுசரிக்கப்பட்டது.
- இது லச்சித் போர்புஹ்ரன் என்பவரின் பிறந்த தின நினைவாக அனுசரிக்கப்பட்டது.
- லச்சித் போர்புஹ்ரன் அஹோம் பேரரசில் ஒரு தளபதியாக செயல்பட்டார்.

- இது தற்போதைய அசாம் மாநிலத்தைக் குறிக்கின்றது.
- இவர் 1671 ஆம் ஆண்டு சராய்கத் போரில் தனது தலைமைத்துவப் பண்பிற்காக அறியப் படுகின்றார்.
- இந்தப் போரானது ராம்சிங் தலைமையிலான முகலாயப் படைகளுக்கும் லச்சித் போர்புஹ்ரன் தலைமையிலான அஹோம் படைகளுக்கும் இடையே நடைபெற்றது.
- இது சராய்கத்தில் (தற்போது குவஹாத்தி) பிரம்மபுத்திரா நதிக்கரையில் நடைபெற்றது.
- இந்தப் போர் நடைபெற்ற போது அஹோமின் அரசர் மிர் ஜூம்லா என்பவராவார்.
- ஆம்பரின் ஆட்சியாளரான மிர்சா ராஜா ஜெய்சிங்கின் மூத்த மகன் ராம் சிங் ஆவார்.

## இந்தியக் காலநிலை மாற்ற அறிவுத் தளம்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் அவர்கள் காணொலி வாயிலாக இந்தத் தளத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் தளமானது காலநிலை மாற்றப் பிரச்சினைகளைக் களைவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அளவில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்த முக்கியத் தகவல்களைக் கொண்டிருக்கும்.
- 2015 ஆம் ஆண்டின் பாரிஸ் ஒப்பந்தத்தைச் சாதிக்கும் வகையில் செயல்படும் ஒரே ஜி20 நாடு இந்தியா ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவானது, தனது ஜிடிபியில் 2005 ஆம் ஆண்டு நிலையிலிருந்து 21% என்ற அளவிலான உமிழ்வுத் திறனைக் குறைக்கும் தனது தன்னார்வ இலக்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- மேலும் இந்தியாவானது இலக்கு ஆண்டான 2030 ஆம் ஆண்டிற்கு முன்பாகவே 35% என்ற அளவிலான உமிழ்வுக் குறைப்பு என்ற இலக்கை அடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது.
- இந்தியாவின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட 3 பங்களிப்புகள் பின்வருமாறு:
    - 2030 ஆம் ஆண்டில் ஜிடிபியின் உமிழ்வுத் தீவிரத்தை மூன்றில் 1 பங்காகக் குறைத்தல்.
    - புதை படிவமற்ற எரிபொருள் ஆதாரங்களிலிருந்துப் பெறப்படும் மின்சாரத்தின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறனாக 40% என்ற அளவினை அடைதல்.
    - கார்பன் டை ஆக்ஸைடின் 2.5 பில்லியன் முதல் 3 பில்லியன் டன்கள் வரையான கார்பன் சேமிப்புத் திறனுக்குச் சமமாக 2030 ஆம் ஆண்டில் மரங்கள் பரப்பிற்கான வனப் பரப்பை கூடுதலாக ஏற்படுத்துதல்.

# சர்வதேசச் செய்திகள்

## அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரம்

- சமீபத்தில் சர்வதேச வான்வெளிப் போக்குவரத்து கூட்டமைப்பானது உலகில் அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரமாக ஷாங்காய் நகரத்தை அறிவித்துள்ளது.
- உலகின் 2வது பரபரப்பான விமான நிலையம் இலண்டனின் ஹீத்ரோ விமான நிலையமாகும்.
- ஷாங்காய் நகரத்துடன் சேர்த்து சீனாவின் இதர 3 நகரங்களான பெய்ஜிங், செங்குடு,

குயாங்சோ ஆகிய நகரங்களும் உலகில் அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரங்களாக உருவெடுத்துள்ளன.

| Ranking | Sep-19 | Sep-20 |
|---|---|---|
| 1 | London | Shanghai |
| 2 | Shanghai | Beijing |
| 3 | New York | Guangzhou |
| 4 | Beijing | Chengdu |
| 5 | Tokyo | Chicago |
| 6 | Los Angeles | Shenzhen |
| 7 | Bangkok | Los Angeles |
| 8 | Hong Kong | London |
| 9 | Seoul | Dallas |
| 10 | Chicago | Atlanta |

# பொருளாதாரச் செய்திகள்


## தேன் - வேளாண் உற்பத்தியாளர் அமைப்பு திட்டம்

- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அவர்கள் சமீபத்தில் இந்தக் கூட்டுறவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், 5 மாநிலங்களில் 5 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் (Farmer Producer Organization - FPO) ஏற்படுத்தப்பட உள்ளன.
- இவை பீகாரில் கிழக்கு சம்பாரன், இராஜஸ்தானில் பரத்பூர், மத்தியப் பிரதேசத்தில் மொரேனா, உத்தரப் பிரதேசத்தில் மதுரா, மேற்கு வங்காளத்தில் சுந்தரவனம் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட உள்ளன.
- இந்த அமைப்புகள் இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பான NAFED (National agricultural Cooperative marketing federation) என்ற அமைப்பினால் அமைக்கப்பட உள்ளன.
- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் படி, தேன் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் 8வது இடத்தில் உள்ளது.
- அதே சமயம் தேன் உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பக்கிர் சந்த் கோஹ்லி – மறைவு

- இவர் இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.
- இவர் டாடா ஆலோசக நிறுவனத்தின் நிறுவனராக (TCS – Tata Consultancy Services) அறியப் படுகின்றார்.
- உலகின் 3வது மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனம் TCS ஆகும்.




# விளையாட்டுச் செய்திகள்

## 2020 ஆம் ஆண்டிற்கான பிபாவின் இறுதித் தரவரிசை

- பெல்ஜியம் நாடு இதில் முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- பிரான்சு 2வது இடத்திலும் பிரேசில் மூன்றாவது இடத்திலும் இங்கிலாந்து 4வது இடத்திலும் போர்ச்சுக்கல் 5வது இடத்திலும் இதில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.




| RANK | TEAM | POINTS | +/- POSITION |
|---|---|---|---|
| 1 | BELGIUM | 1765 | 0 |
| 2 | FRANCE | 1733 | 0 |
| 3 | BRAZIL | 1712 | 0 |
| 4 | ENGLAND | 1661 | 0 |
| 5 | URUGUAY | 1645 | 0 |
| 6 | CROATIA | 1642 | 0 |
| 7 | PORTUGAL | 1639 | 0 |
| 8 | SPAIN | 1636 | 0 |
| 9 | ARGENTINA | 1623 | 0 |
| 10 | COLOMBIA | 1622 | 0 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★